தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உ௰௭	மலர்
௫௰	இராட்சச, மாசி (1976 — பிப்ரவரி — மார்ச்சு)	கக

அடியார்க்கு நல்லார் உரை நுட்பம்

ந மு கோவிந்தராய நாட்டார், பி. ஏ., எல். டி.,

எழுத்து, சொல், பொருள் ஆகிய இயற்றமிழ் இலக்கணம் மூன்றும் இயற்றி 'மல்கு நீர் வரைப்பில் பல் புகழ் நிறுத்த படிமையோராகிய' தொல்காப்பியனாரும், முப்பாலில் செப்பரிய நாற்பால் தெரித்த தெய்வப் புலமை திருவள்ளுவனாரும், முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரம் யாத்த வித்தகக் கவிஞராம் இளங்கோவடிகளாரும் தமிழ்ப் பெருமக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டோராவர். இம் முழு முதல் தமிழ் நூல் மூன்றிற்கும் உரைகண்ட, இளம்பூரணர், நச்சினார்க்கினியர் முதலியோர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார் ஆகியோருடைய ஆழ்ந்தகன்ற இலக்கண அறிவினையும், பரந்துபட்ட இலக்கிய அறிவினையும், திட்ப நுட்பம் வாய்ந்த உரைப் பெருமையினையும் உள்ளவாறுணர்ந்து நுகர்ந்து நம் காலத்துப் பெரும் புலவர்களாகிய அரசன் சண்முகனார், இரா. இராகவ ஐயங்கார், ந. மு. வேங்கடசாமி நாட்டார் முதலியோர் பாராட்டிப் புகழ்ந்து வருவோராயினர் உரைகளில் இவர்களுக்கு யாதானும் ஐயம் ஏற்படின் உடனே தவறு காணுமல் அமைதி காணவே முயற்சிப்பர் ஏனெனில் உரையாசிரியர்கள் அரங்கில் வட்டாடுவோர், அரங்கின்றி வட்டாடார்.

இனி மேற்குறித்த 'சிலம்பைத்தந்த காரணம்' என்ற கட்டுரைக் கண் புகுந்து ஆராய்வாம்: மாதவியை வெறுத்துக் கண்ணகியின் பால் திரும்பிய கோவலன் பள்ளியறையுட்புக்கு

'சலம்புணர் கொள்கைச்சலதி யொடாடிக்
குலந்தரு வான்பொருட் குன்றந் தொலைந்த
இலம்பாடு நாணுத்தரு மெனக்கு'

எனக் கண்ணகியை நோக்கிக் கூறுகின்றான். இதனைக் கேட்ட கண்ணகி

'நலங்கேழ் முறுவல் நகைமுகங்காட்டிச்
சிலம்புள கொண்ம்' என விடை பகர்கின்றாள்.

இவ்விடையைக் கேட்ட கோவலன்

'சேயிழை கேளிச்
சிலம்பு முதலாகச் சென்ற கலனோ
குலந்தபொரு ளீட்டுத லுற்றேன் மலர்ந்தசீர்
மாட மதுரை யகத்துச் சென்றென்னோடிங்
கேடலர் கோதா யெழுக'

எனக் கூறுகின்றான்.

இவ்வுரையாடலுள், மாதவிக்கு மேலும் கொடுப்பதற்குப் பொருளின்மையால் கணவன் வருந்துகிறான் எனக் கருதி 'சிலம்புள கொண்ம்' எனக் கண்ணகி கூறினாள் என்று அடியார்க்கு நல்லார் பொருள் விரிக்கின்றார். இதனை மறுத்து வாணிபம் செய்யப் பொருளின்றி வருந்துகின்றான் எனக் கருதியே கண்ணகி இவ்வாறு கூறியிருக்க வேண்டும் என்று பொருள் கூறுகின்றார் சிலம்புச் செல்வர் அறிஞர் கிராமணியார் அவர்கள். தம் உரைக்கு இவர்கள் காட்டியுள்ள காரணங்கள் பின் வருமாறு :

1. கண்ணகியைப் பிரிந்த கோவலன் அவளை முற்றிலும் மறந்தே விட்டான் அவளை நெஞ்சாலும் நினைக்கவில்லை பின்னர் எச்சமயத்திலும் மாதவியின் பொருட்டாகக் கோவலன் கண்ணகியின் இல்லத்தையடைந்து அவளுடைய நகைகளைப் பெற்றுச் சென்றதாக சிலப்பதிகாரத்தில் செய்தி இல்லை, அதனாற்றான் பல ஆண்டுகளுக்குப் பிறகு தன் பத்தினியை முதன் முதலாகப் பார்த்த கோவலன் அவளுடைய வாடிய மேனியைக் கண்டு வருந்தினான் கோவலன் வரவு எதிர் பாராத சம்பவமாக இருந்ததால்தான் "காவலன் போலும் கடைத் தலையான் நம் கோவலன்" என்ற வியப்பு கலந்த மகிழ்ச்சியோடு தகவல் கொடுத்தாள் தோழி.

2. கோவலன் தன்னை அடைவதற்குச் சற்று முன்புதான் தனது தோழியான தேவந்தியிடம் தான் கண்ட தீக் கனவைத் தெரிவித்தாள் கண்ணகி கோவலன் தன்னை அடைய விருப்பதையும் அவனோடு தான் வேற்றூர் செல்லவிருப்பதையும் அவ்வூரில் தங்களுக்குக் கேடு நேரவிருப்பதையும் கூறுகின்றாள் கண்ணகி. அதைக் கூறி முடிப்பதற்குள் கோவலன் கண்ணகியின் இல்லத்தை அடைந்து விட்டான் என்றால் கனவு பலிக்கத் தொடங்கிவிட்டது என்றுதான் அவள் எண்ணியிருப்பாள்.

3 தன்னுடைய நகைகளைப் பெற்று கோவலன் திரும்பவும் மாதவியிடம் செல்வான் என்று நினைப்பதற்குக் கண்ணகி அவ்வளவு அறிவற்றவள் இல்லை. அவள் வணிகர் குலத்துப் பெண்ணாதலால் கணவன் வாணிபம் செய்யும் கருத்துடன் வந்திருப்பதைத் தெரிந்து கொண்டாள். இவனுடைய கருத்தைச் சரியாகப் புரிந்து கொண்டதாலேயே கோவலன் மதுரை சென்று சிலம்பு முதலாகக் கொண்டு சென்ற பொருளை யெல்லாம் வாணிபம் செய்து ஈட்டத் திட்டமிட்டிருப்பதைக் கண்ணகியிடம் கூறி அவளையும் உடன் வர அழைத்தான்

4 புராண காலத்தில் கணவன் பரத்தையோடு கூடி வாழ்வதற்கு மனைவி மனமுவந்து உதவிபுரிவது கற்பிற்குரிய சிறப்புகளில் ஒன்றாகக் கருதப்பட்டது. நளாயினி கதை இதற்குச் சான்றாகும். கணவன் ஒழுக்கக் கேட்டிற்கு உதவி புரியும் பெண் கண்ணகி இல்லை. இதற்கு மாறாகக் கண்ணகி, கொலைக்களக் காதையில்

" போற்றா வொழுக்கம் புரிந்தீர் யாவதும்
மாற்றா வுள்ள வாழ்க்கை யேன் "

என்று கணவனை இடித்துரைக்கின்றாள்.

இனி மேற்கூறப்பெற்றுள்ள காரணங்களை முறையாக ஆய்வாம்: அரங்கேற்றுக் காதையின் முடிவில் மன்னன் மாதவிக்குக் கொடுத்த பசும் பொன் மாலையை கோவலன் ஆயிரத்தொண் கழஞ்சு, பொன் பரியமாகக் கொடுத்து வாங்கிக் கொண்டான் என்றும் பின்னர் மாதவியுடன் அவள் இல்லிற்புக்குத் தங்கி விட்டான் என்றும் அறிகின்றோம் இக்காதைக்கு அடுத்து வரும் அந்திமாலைச் சிறப்புச் செய்காதையால், கோவலன் பிரிந்த பிறகு கண்ணகி திலகம், குங்குமம், மை, நெய் முதலியவற்றாலும். சிலம்பு. மேகலை. குழல் முதலிய அணிகலன்களாலும் தன்னை ஒப்பனை செய்து கொள்ளாது மங்கல அணிகலன் ஒன்று

டனேயே வாடியிருக்கின்றாள் என்பதனை அறிகின்றோம். கனாத் திறம் உரைத்த காதையால் கண்ணகியிடம் அவள் அணிகலன்களில் சிலம்புகளே மிகுந்திருந்தன என்பதனை யறிகின்றோம். ஏனை அணிகலன்கள் யாங்குச் சென்றன? எவ்வாறு சென்றன? என்பதனை ஆராய வேண்டாமா? இதனாலன்றோ அடியார்க்கு நல்லார்

"சிலம்புளவென்றாள், இவை யொழிந்த கலனெலாம் தொலைதலால்; இவை சிலம்புகள் அணியாதிருத்தலின் அவள் அறியானுக்கருதினும் அவள் தளர்ச்சி கூறுதலால்தான் இவை யுண்மை நினைந்து கூறினாளென்க புலந்து கூறினாளெனிற் கற்பின்றன்மையன்றாம்." என உரைவிரித்துள்ளார். இவை தொலைந்தமைதான் யாங்ஙனம்? கோவலன் பன்முறை பத்தினியிடம் திரும்பி வந்து மாதவிக்குக் கொடுக்கும் பொருட்டு ஒவ்வொன்றாக அவற்றைப் பெற்றுச் சென்றிருக்க வேண்டுமன்றோ? கணவனின் இத்தகைய தன்மையை கண்ணகி உணர்ந்திருந்ததனாலேயே இம்முறை மாதவிக்குக் கொடுக்கும் பொருட்குறை பாட்டால் அவன் தளர்ந்து கூறுகின்றான் எனக் கருதினாள். "பின்னர் எச்சமயத்திலும் மாதவியின் பொருட்டாகக் கோவலன் கண்ணகியின் இல்லத்தை யடைந்து அவளுடைய நகைகளைப் பெற்றுச் சென்றதாக சிலப்பதிகாரத்தில் செய்தியில்லை" என்று அறிஞர் கிராமணியார் கூறுகின்றார். அங்ஙனமாயின் கலன்கள் எங்ஙனம் தொலைந்திருக்கக் கூடும் என்பதனை அறிஞர் சிந்திக்க வேண்டாமோ? உய்த்துணர வேண்டாமோ? உய்த்துணர்ந்து பொருள் கொள்ள வேண்டியிருத்தலை சிலப்பதிகாரத்தில் பல விடங்களிற் காணலாகும் இது காப்பியமரபு. நாடகங்களுக்கும் பொருந்தும் இன்னணம் சுருங்கக்கூறி விளங்க வைக்காமல் ஒவ்வொன்றையும் தொடர்ந்து கூறிச் சென்றால் காப்பியம் அளவிற்படாது விரிவடையும் அநுமன் இலங்கை சென்று திரும்பி வந்த பிறகு தான் செய்து வந்த காரியங்களையெல்லாம் வானர வீரர்களுக்கு ஒவ்வொன்றாக எடுத்துச் சொல்வதாக வால்மீகத்தில் காணப்படுகிறது. 'ஆனால் கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பன் இச்செய்திகளை ஒரே பாடலில் அடக்கி விட்டான். பாடல் வருமாறு:

பொருதமை புண்ணே சொல் வேன்றமை போந்த தன்மை
உரைசெய ஊர்தீயிட்டது ஓங்கிரும் புகையே ஓத
கருதலர் பெருமை தேவி மீண்டிலாச் செயலே காட்ட
தெரிதர வுணர்ந்தோம் மற்றென்னினிச் செய்து 'மென்றார்

இது நிற்க, கோவலன் இம்முறை தன் பத்தினியின் வாடிய முகங்கண்டு வருந்துவதற்குத் தக்க காரணம் உண்டு. மாத வியின் பால் ஏற்பட்ட வெறுப்பின் காரணமாக முதன் முதல் கோவலன் தன் உண்மை நிலைமையை உணர்கின்றான். உணர்ந்த வழி வான்பொருட் குன்றமும், பத்தினியின் கலன் களும் தொலைத்த தன் இழிதகைமை அவனுக்குப் புலனாகிறது. அணிகலனின்றியும், திலகம் தீட்டாதும் வாடி நிற்கின்ற பத் தினியின் கோலம் அவனைக் கட்டழிக்கின்றது. முன்பெல்லாம் மாதவியின் பால் வெறுப்பின்மையின் இவை அவனுக்குப் புலனாகவில்லை.

காவலன் போலுங் கடைத்தலையான் வந்துநங்
கோவலன் என்றாளோர் குற்றிளையாள்

'இவ்வாறு வியப்புக் கலந்த மகிழ்ச்சியோடு தகவல் கொடுத்தாள் தோழி' என்று அறிஞர் கிராமணியார் கூறியிருக்கின்றார். தகவல் கொடுத்தது தோழி இல்லை, குற்றிளையாள் ஏவற்குறுந் தொழில் செய்யும் இளையாள்.

இரண்டாவது காரணம் கண்ணகி கண்ட கனவு தன் தோழியாகிய தேவந்தியிடம் தான் கண்ட கனவினைப் பற்றி விரிவாகக் கூறிய கண்ணகி தான் வணிகர் குலத்துப் பெண் ணாயிருந்தும் தன் கணவனிடம் அதைப் பற்றி ஒரு சொற்றா னுங் கூறாது எழுக என்றவுடன் எழுந்து விடுகின்றாள். இதனால் அவள் தான் கண்ட கனவிற்கும் மதுரைப் புறப்பாட்டிற்கும் காரண காரியத் தொடர்பு கொள்ளவில்லை என்பது விளங்கு கின்றது கொண்டிருந்தால் தீக் கனவைக் குறித்துத் தன் கண வனுக்கு எச்சரிக்கை செய்யாதிராள். சிலம்புளகொண்ம் என்ற போது கண்ணகியின் கருத்தில் வாணிப நோக்கமே படிந்திருக்கு மாயின். இக்கனவு குறித்துத் தன் கணவனிடம் ஒரு சொற்றா னும் கூறுதிருப்பளோ? கிராமணியார் அவர்கள் காட்டியுள்ள மூன்றாவது காரணத்திற்கும் இதுவே தக்க விடையாதலால் நான்காவது காரணத்தைப்பற்றி இனி ஆராய்வாம்:

"கணவன் ஒழுக்கக் கேட்டிற்கு மனைவி உதவி புரிதல் புராண காலக் கற்பு, கண்ணகி இதற்கு மாறானவள் கொலைக் களக் காதையில்,

'போற்றா வொழுக்கம் புரிந்தீர், யாவதும்
மாற்றாவுள்ள வாழ்க்கையேன்'

என்று கணவனை இடித்துரைத்திருக்கின்றாள்" என்பது நான் காம் காரணம்.

ஈண்டு கருத்திற்கொள்ள வேண்டியன, எச்சமயத்தில் கண்ணகி இவ்வாறு கூறினாள் என்பதும், கணவனை இவ்வாறு நேர்முகமாக இடித்துரைத்தாளா என்பதும் ஆகும்: புறஞ்சேரியில் மாதரி அமைத்துக்கொடுத்த புது மனையிலிருந்து கண்ணகி பல்வேறு கறிகளுடன் அடிசிலாக்கித் தன் கணவன் கால்களைக் கழுவிய நீரைத் தொழுது வழிபாடு செய்து அவரை ஆதனத் திருத்தி அமுது படைத்து 'அடிகள் அமுதமுண்க' என்று உபசரித்து உண்பிக்கின்றாள். பிறகு அவர்க்கு வெற்றிலைச் சுருளும் அடை காயும் கொடுக்கின்றாள். கோவலன் மனம் குழைகின்றது பத்தினியை அருகழைத்து அணைத்துக் கண்ணகியின் அரும்பெரும் குணங்களின் பெருமையினையும் தானிழைத்த தீங்கினையும் கல்லும் உருகும் சொற்களால் இரங்கிக் கூறுகின்றான். இதற்கு விடையாகக் கண்ணகி கூறுவது

"அறவோர்க்களித்தலும்' என்று தொடங்கி
ஏற்றெழுந்தனன்யான்"

என்று முடிகின்ற பதின்மூன்றடிகளில் வந்துள்ளது இப்பகுதியின் பதினொன்று பன்னிரண்டாம் அடிகள் தான் 'போற்றா வொழுக்கம் புரிந்தீர்' எனத் தொடங்கி வருவன. இவ்விடையின் பருப்பொருள் பின்வருமாறு:—

'நீர் என்னைவிட்டு நீங்கினதாய் முறைப்படி இல்லறம் நடத்துதலை இழந்தேன் நும்பெற்றோர் என் பொறுமையினை அருள்கலந்த மொழிகளால் பாராட்டினர் அவர்கள் வருந்தாமைப் பொருட்டு யான் என் துன்பத்தை மறைத்துப் புன்முறுவல் காட்டியும் அவர்கள் அதனை அறிந்து வருத்தமுற்றனர் இங்ஙனம் அவர்கள் வருந்த நீர் போற்றா வொழுக்கத்தை விரும்பினீர், எனினும் உமது சொல்லைச் சிறிதும் தட்டாத உள்ள வாழ்க்கையேன் ஆகலின் யான் அதற்கு மனம் பொருந்தி எழுந்தேன்!

ஆகலின் 'போற்றா வொழுக்கம் புரிந்தீர்' என்ற சொற்கள் இடித்துரைத்தல் ஆகுமா? "தேம்பித் தேம்பி அழுது கொண்டு சொன்னாள்" என்பதே காலப் பொருத்தமாகும் புலந்து கூறுவதே கற்பின் றன்மை யன்றாயின் இடித்துரைத்தல் கற்பின் றன்மையாமோ? அன்றியும் மங்கல வாழ்த்துப் பாடலில், "தீதிலா வடமீனின் திறம் இவள் திறமென்றும், 'அருந்ததியன்னாள்' என்றும் கண்ணகியை இளங்கோவடிகள் பாராட்டியிருத்தலால், அவர் புராண காலக் கற்பை ஏற்றுக் கொண்டார் என்பதே போதரும். கணவன் ஒழுக்கக் கேட்டினையும் பொறுப்பதே கற்பின் திண்மையாகும் இதனாலேயே அகப்பொருள் நூல்களில் 'பரத்தையர் பிரிவு' என்றதொரு

துறையுமுள்ளது மணிவாசகப் பெருமானின் திருக்கோவை யாரில் பரந்தையர் பிரிவில் தலைவியின் நிலையைக் குறித்த ஓர் அற்புதப் பாடல் கீழ்வருமாறு :

வேயாது செப்பின் அடைத்துத் தமிவைகும் வீயினன்ன
தீயாடி சிற்றம் பலமனை யாள்தில்லை யூரனுக்கின்
றேயாப் பழியென நாணியென்கண் இங்ஙனே மறைத்தாள்
யாயா மியல்பிவள் கற்புநற் பால இயல்புகளே
(இது தோழி கூற்று)

அடியார்க்கு நல்லார். சிலப்பதிகார உரையில் ஆங்காங்கு இத்தகைய துறைகளை விளக்கிச் செல்லுதலையும் யாம் உளத்திற் கொள்ள வேண்டும்.

இவை நிற்க சிலப்பதிகாரத்தின் ஈடில்லாச் சிறப்பிற்கு ஏனைய காதைகளைவிட கொலைக்களக் காதையின் முதல் 97 அடிகள் ஒரு தனிக் காரணமாகும் ஈங்குதான் கண்ணகி, கோவலன் சரிதப் போக்கு உச்ச நிலையை அடைகின்றது. இதனை ஆங்கிலத்தில் (Climax) என்று சொல்லுவர் கண்ணகி தன் கைகளால் காதலனுக்குக் காய்கறிகளுடன் அடிசிலாக்கி, அவனை ஆதனத்திருத்தி அமுதுண்க அடிகளென இனிய குழைந்த சொற்களால் வேண்டுவதும், போற்றுவொழுக்கம் புரிந்த அவன் தன் இழிதகைமையை மனம் விட்டுக்கூறி இரங்கிக்காதலியை

"என்றுயர் களைந்த
பொன்னே கொடியே புனைபூங் கோதாய்
நாணின் பாவாய் நீணில விளக்கே
கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி"

எனப் பாராட்டி அவளைத் தனியே அழைத்து மெய் முழுவதும் தழுவி அணைத்து, உள்ளம் வெதும்பி பெருகிய கண்ணீரை மறைத்தவனாகி 'மாறிவருவன் மயங்கா தொழிகென' சிலம்பு கைக்கொண்டு புறப்படுவதுமாகிய செய்திகள் "இனி என்னுகுமோ இவர்கள் நிலை?". என்ற ஐயத்தைப் படிப்போரிடம் எழுப்பி அவர்கள் உள்ளத்தைக் கலங்கவைப்பனவாகும். பாரதியார் 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' எனக் கூறியதற்கு இது ஒரு முக்கிய காரணமாகும்

இதனுற்றானே என்னவோ, இளங்கோவடிகளார் சிலப்பதிகாரத்தின் முப்பது காதைகளில் நடுவணதாகிய அடைக்கலக் காதைக்கு அடுத்ததாக கொலைக்களக் காதையை அமைத்துள்ளார். சிலப்பின் இத்தகைய சிறப்புக்களை யெல்லாம் அரங்கில் வட்டாடுவோர் அறிவர்

குயில் தந்த முத்தம்

(அ. ஆறுமுகம், எம். ஏ , பி. டி.,)

இருபதாம் நூற்றுண்டுத் தமிழ் இலக்கிய வானில் பாடிப் பறந்த குயில்கள் பல பாடுங் குயில்களும் பல பாட்டின் தனித் தன்மையால் இதயத்தில் இடம் பெறுங் குயில்களே ஏட்டிலும் நாட்டிலும் காலத்தை வென்று வாழுங் கவிக்குயில்களாகத் திகழும். இத்தகு குயில்களுள்ளும் தனியிசையமைத்துப் புரட் சியை விதைத்து முத்தமிழ்க் கவிதைக் களஞ்சியம் பலவற்றைத் தந்து பறந்த புதுவைக் குயில் போற்றற்குரிய புரட்சிக்குயிலாய் விளங்குதலைக் காணலாம். இப்புரட்சிக் குயிலின் பாவியங்களுள் ஒன்று எதிர்பாராத முத்தம்.

பிள்ளைத் தமிழ் இலக்கியத்தில் முத்தப் பருவம் ஒரு பிரிவா யினும் சேய்கள் பெறும் முத்தம் பற்றிச் செப்புவது அது. காத லர் அன்புச் சின்னமாய்ப் பெற்றுக்கொள்ளும் முத்தத்தையே தலைப்பாகத் தந்து முப்பத்தைந்தாண்டுகட்கு முன்பே இப்பாவி யம் படைத்தவர் பாவேந்தர்.

சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் குப்பன் வஞ்சியைப் பார்த்து மூலிகை கொடுத்தால் என்ன தருவாய் என்று கேட்க நோகா மல் முத்தங்கள் நூறு கொடுப்பேன் என்கிருள் வஞ்சி இன் னும் 'அந்தி வராவிட்டால் பெண்ணே. இந்தா ஆசை முத்தம்' என்று தந்து நடந்த வண்டிக்காரனையும். 'மூடி மலர்க்கை திறந்து வாங்கி முறிப்பும் முத்தமும்' குறித்த குறத்தியையும். கட்டி வெல்லங் கொடுத்து எட்டி ஓரே முத்தம் இட. கட்டி வெல்லத்தைக் கசக்குதென்றும் கட்டாணி முத்தம் இனிக்கு தென்றுங் கூறுந் தலைவியையுங் காட்டி முத்தத்துக்குச் சிறப்பீந்த கவிஞர் இங்கு தலைப்பிலேயே முத்தம் வைத்து விடுகிருர்.

பொன்முடியின் உறவுப்பெண் பூங்கோதை. பெற்றோரின் பிணக்கால் உறவறுந்த நிலையில் இருவரும் சந்திக்கின்றனர். காதலிக்கின்றனர் நிலையறிந்த பொன்முடியின் பெற்றோர் அவனை முத்து வணிகத்துக்கு வடநாட்டிற்கு அனுப்பி வைக் கின்றனர். பெற்றோரறியாமல் பூங்கோதை மாறுவேடத்தில் வணிகர்களுடன் தலைவனைத் தேடி வடநாடு செல்கிருள் இடை யில் வணிகம் முடித்துத் திரும்பும் பொன்முடியும் தேடிச்செல் லும் பூங்கோதையும் சந்தித்து நெருங்கும்போது வடவரின்

வாளுக்கு இரையாகிறான் பொன்முடி. கிடைத்த எதிர்பாராத முத்தத்துடன் தலைவனின் தலையைப் பிடித்துக்கொண்டு தரையில் வீழ்ந்து உயிர் விடுகிறாள் பூங்கோதை. முடிவறிந்த பெற்றோர் தருமபுர மடத்துக்குச் சென்று நிலையுணர்த்த குமரகுருபரர் வடநாடு சென்று சைவந் தழைக்கப் பாடுபடப் போவதாக அறிகின்றனர்.

வள்ளியூர்த் தண்ணீர்த் துறையில் காதல் விதைக்கப்பெற்று மறைநாய்கன வீட்டில் வளர்த்து பறிக்கப் பெற்று வடநாட்டில் இறப்போடு முடிவு பெறுகிறது. வடநாட்டில் கதையினை முடிக்க விரும்பார் போன்று இரண்டாம் பகுதியைத் தொடங்கித் தருமபுரச் சந்நிதியில் கண் கெட்டபின் கதிர் வழிபாடென' வணிகர் இருவரும் இணைந்ததுடன் கதையை முடிக்கிறார். கதையில் பெருந் திருப்ப மெதுவுமின்றேனும் அவலச் சுவையின் உச்சத்திற்கழைத்துச் சென்று கதையை முடிக்கும் பாங்கு பாவியத்துக்கு மெரு கூட்டுகிறது

இக் காவியத்தில் பொன்முடி, பூங்கோதை, இவர்கட்குத் தூதாகக் கிடைத்த சணப்பன் ஆகிய மூவருமே இன்றியமையா உறுப்பினர்கள்.

பூனையும் எலியுமாகக் காதலரின் பெற்றோர் விளங்க ஆவியும் உடலுமாய்க் காதலா பழகினர் இவர் தம் காதலின் ஆழத்தளவு பெற்றோர் தம் பகையளவு. காவியத் தொடக்கத்தில் பொய்கையில் புனலாடும் பெண்கள் பூத்த இனமலர் அழகு கண்டு 'இச்' சென்று முத்தம் ஈவதைக் காட்டுகிறார் பூங்கோதையும் அவள் தோழி புனிதையும் புனலாடி புனலேந்தி கனிவீசும் சாலைவழி கைவீசி மீளலைக் காண்கிறான் பொன்முடி. அடி மூச்சுக் குரலால் ஒரே நேரத்தில் 'அத்தான்', 'பூங்கோதை' என்றனர். நின்றனர் புனிதை விலகினாள்.

"கையிரண்டும் மெய்யிறுக இதழ் நிலத்தில்
கன உதட்டை ஊன்றினான் விதைத்தான் முத்தம்"

இங்கு காதல் விதைக்கப்படுகிறது இதழ் நிலத்தில் உதட்டை ஊன்றி விதைத்த முத்தம் காதலை வளர்க்கிறது. கடைக்குச் சென்றவன் கணக்கை மறந்து காதல் நினைவில் இருக்கிறான். மறு நாளும் கடையிலே இருக்குமாறு. கட்டளையிட்ட தந்தையின் சொல்லை மீற இயலாமல் காதலிக்குத் தூது செல்லும் ஆளாகச் சணப்பனைத் தேர்ந்தெடுக்கிறான். பத்து வராகன் தந்து பாவையைச் சந்திக்க நேரங் கேட்டு வருமாறு தூதனுப்பு

கிறான் பொன்முடி. தூது செல்லும் சணப்பனை எண்ணும் போது காதலர் மீது கழிவிரக்கம் ஏற்படுகிறது நமக்கு. ஐயோ! பாவம்! என்ற உணர்வோடு அணுகுகிறோம்.

ஏலா இருளில் வழி தடவி கிள்ளையாம் பூங்கோதை வீட்டில் புகுந்தான் பொன்முடி வீணையிலோர் தந்தி மெதுவாய் அதிர்ந்தது போல் 'அத்தான்' என்ற பூங்கோதையை 'ஓங்காரமாய்த் தடவி அன்பின் உயர்பொருளைத் தாங்கா மகிழ்ச்சியுடன் தான் பிடித்துப் பூங்கொடியை மாரோடணைத்து மணற்கிழங்காய்க் கன்னத்தில் வேரோடு முத்தம் பறித்தான். புரட்சிக் கவிஞரின் சித்திர முத்திரை இங்கே சிறக்கக் காணலாம். முதலில் விதைத்தான் முத்தம் இங்கே பறித்தான் முத்தம்.

மறைநாய்கன் பொன்முடியைப் பிடித்துப் புன்னையில் கட்டி அடிக்கும்போது தடுக்க வந்து துன்பமேற்ற தன் காதலியின் வருத்தத்தை எண்ணி உலராக் காயங்களோடு நடந்தான் பொன்முடி. காவலில் வைக்கப்பெற்ற பூங்கோதை சணப்பனைப் பார்த்துப் பொருளைக் கொடுத்துப் பொன்முடிக்கொரு கடிதந் தருகிறாள். பன்னிரண்டு அறுசீர் விருத்தத்தில் பூங்கோதையின் கடிதத்தைச் சுவைபடத் தருகிறார் கவிஞர் கடிதத்தில் பரம்பொருள் பேரின்பமெனக் கூறும் பெரியோரெல்லாம் கைபிடித்தணைக்கும் முத்தம் ஒன்றேனுங் காணார் போலும்' எனக் குறிப்பிடும் பூங்கோதையின் கூற்று அவள் பெற்ற முத்த இன்பத்தின் சிறப்பை உணர்த்தி நிற்கிறது கடிதத்தைப் படித்த பொன்முடி பண்டாரத்திடம் பொய்த்தாடியும் மீசையுங் கேட்கிறான். அவன் வேடத்தில் பொன்முடி பூங்கோதையைச் சந்திக்கிறான். தாமரை போய்ச் சந்தனத்தில் புதைந்ததைப்போல தமிழ்ச் சுவடிக்கன்னத்தில் இதழ்உணர்வை நேமமுறச் செலுத்தி நறுங் கவிச் சுவைகள் நெடுமூச்சுக் கொண்ட மட்டும் மாமியவள் பால் கறந்து முடிக்க மருமகனும் 'இச்' சென்று முடித்தான் முத்தம். இதுதான் எதிர்பார்த்த முத்தத்தின் முடிந்த முத்தம். எனவே தான் முடித்தான் முத்தம் என்கிறார் கவிஞர் இம்மட்டோ?

"பூ முடித்த பொட்டணத்தை வைத்துச் சென்றான்
பூங்கோதை குழல் முடித்துப் புகுந்தாள் உள்ளே
நீ முடித்த வேலையென்ன என்றாள் அன்னை
நெடுங் கயிற்றைத் தலைமுடித்துத் தண்ணீர் மொண்டேன்.
ஆ முடித்த முடியவிழ்த்துப் பால் கறந்தீர்
அதை முடித்தீர் நீர் தெளித்து முடித்தேன் இன்னும்

" முடித்த தேன்கூட்டை வடித்தல் போல
எனை வருத்தாதீர் என்றாள் "

ஒன்பது முடிவை ஓரே இடத்தில் வைத்து முத்த முடிவை உள்ளுறையாய் வெளிப்படுத்துங் கவிஞரின் ஆற்றல் ஈண்டு நயமுற ஒளி விடுதலைக் காணலாம்.

முதலாளிகள் வேறுபட்டுப் பகை கொண்டாரேனும் அவர் தம் தொழிலாளிகள் செய்தி மாற்றம் பெறுவர் என்ற உலகியல் இரிசன். பொன்னன் ஆகிய இரு பணியாளரின் வழி வெளிப்படுகிறது. மறை நாய்கனின் பணியாள் இரிசன். மான நாய்கன் பணியாள் பொன்னனிடம் 'பொன்முடியும் பூங்கோதையும் புன்னையின் அடியில் பூரிப்பு முத்தம் தின்றபோது நிகழ்ந்ததைத் தெரிவிக்க, பொன்னனும் மறக்காமல் மான நாய்கனிடம் கூற, எதிர்பாராது வந்த பண்டாரமும் உளறிக் கொட்ட உண்மை வெளிப்படுகிறது மான நாய்கனும் மனைவி அன்னமும் மனங் கலங்கி முத்து வணிகத்திற்கு வடநாட்டிற்குப் பொன்முடியை அனுப்பத் துணிகின்றனர்.

இதையறிந்து மறைநாய்கனும் மனைவி வஞ்சியும் சிரிப்போடும் சினத்தோடும் வடக்கென்றால் சாக்காடென்றும், மாளட்டும் அவனென்றும் பேசிக் கொள்கின்றனர். செவியுற்ற பூங்கோதை, கள்ளியும் பாலைபோல் கண்ணீர் விட்டுக் கடல் நீரில் சுறாப் போலப் படுக்கையில் துள்ளித் துவண்டாள் தனியகன்ற காதலன்பால் செல்வதென்ற தள்ளவொண்ணா முடிவொன்றினைக் கண்டாள்.

வட்டமதியிலும், கொட்டுங் குளிரிலும், வானம்பாடி இசையிலும் பூங்கோதையைக் காணும் பொன்முடி வணிகர்களுடன் மகோதய வனத்தில் தங்குங்கால் வஞ்சக வடவர் வந்து யாகத்துக்குப் பொன் கேட்கின்றனர். " சீவனை வதைக்கும் இன்னல் சேர் யாகத்தை யாமொப்போம் பொன் தாரோம் போவீர் " எனப் பொன்முடி புகல்கிறாள், வஞ்சத்தை, எதிர்காலச் சூழ்ச்சியை வெளிக்காட்டாமல் நெஞ்சத்தில் வைத்துக் கொண்டு மீண்டு வரும்போது மறித்துத் தாக்குகின்றனர். மற்றோர் வணிகக் குழுவுடன் மாற்றுருவில வரும் பூங்கோதையும் பொன்முடியும் எதிர்பாராது சந்திக்கின்றனர். ஆவலுடன் தழுவ நெருங்குகின்றனர்.

நேர்ந்தோடும் இருமுகமும் நெருங்கும் போது
நெடுமரத்தின் மறைவினின்று நீள் வாளொன்று

பாய்ந்ததுமேல் அவன் முகத்தை அணைத்தாள் தாவிப்
பளீரென்று முத்தமொன்று பெற்றாள் சேயின்
சாந்த முகந்தனைக் கண்டாள் உடலைக் காணாள்
தலைசுமந்த கையோடு தரையிற் சாய்ந்தாள்
தீந்தமிழர் உயர்வினுக்குச் செத்தான் அன்பன்
செத்ததற்குச் செத்தாளத் தென்னாட் டன்னம்''

என்ற பகுதியில் இருவரின் அவல முடிவை எண்ணி இரங்குகிறோம்.

எதிர்பாராத முத்தத்தில் தொடங்கி எதிர்பார்த்த இரு முத்தங்கள் பெற்று இறுதியில் எதிர்பாராத முத்தம் பெற்ற நிலையைக் கொண்டே இப்பாவியம் 'எதிர்பாராத முத்தம்' என்ற தலைப்பைப் பெற்றுள்ளது.

முடிவுணர்ந்த இருவரின் பெற்றோரும் தருமபுரச் சந்நிதிக்குச் சென்றுரைக்கக் குமர குருபரர் வட நாடு சென்று சைவந் தழைக்கப் பாடுபடப் போவதாக அறிகின்றனர். எழுதிய ஓவியங்கள் கலைந்தன எனப் பதைத்துப் பழுதிலா எம் குடும்பப் பரம்பரை ஆல் இன்றோடு விழுதொடு சாய்ந்தது என உளம் வெம்பிச் சென்றனர் என்ற காட்சியுடன் இரண்டாம் பகுதியை முடிக்கிறார்.

முதல் முத்தம் எதிர்பாராதது. காதல் விதைக்கப் பெறுகிறது. இரண்டாம் முத்தம் எதிர்பார்த்தது தண்டனை கிடைக்கிறது. மூன்றாம் முத்தம் எதிர்பார்த்தது இறுதியாகிறது. இறுதியில் கிடைக்கும் எதிர்பாராத முத்தம் இறப்பொடு சிறக்கிறது

தனித்தமிழ் ஈடுபாடும் தன்மானக் கொள்கையும் இடம் பெறாக் காலத்தில் இப்பாவியம் எழுந்ததால முப்பதுக்கு மேற்பட்ட வட சொற்கள் கலந்திருத்தலையும் சைவந் தழைக்கப் பாடுபட வேண்டுமென்ற உணர்வு வற்புறுத்தப் பெறுதலையுங் காண்கிறோம்.

பாவேந்தரின் தனி முத்திரை இப் பாவியத்திலமைந்துள்ள பாங்கினைப் பின்வரும் பகுதியில் காண்போம்.

ஆசிரியப்பா, அறு சீர் விருத்தம், எண் சீர் விருத்தம் வெண் கலிப்பா. கலி வெண்பா ஆகிய பாவகைகளில் எதுகை. மோனை. இயைபு ஆய தொடை நயமமைந்த முப்பத்திரண்டு தலைப்புகளுடன் படைத்திருக்கிறார்.

புனலாடும் பூவையரின் செயல் கண்டு கிழக்குச் சூரியன் உச்சி ஏருது நின்று நொச்சிக்குப் பின் ஒளிவதாகக் காட்டும் தற்குறிப்பேற்றம், அணங்குகள் மலர்கள் என்ற வேறு பாடங்கே காணேம் என்ற நயம். ஆடையை அவிழ்த்து நீரை மறைக்கும் ஆட்டம் இவை கவிஞரின் நுண்ணேக்கை அறிவிக் கின்றன.

சந்திப்புக்கு முன் காதலரின் உள்ளப் போராட்டத்தை முறைப்படுத் தம்பாங்கில் உளவியலாற்றல் வெளிப்படுகிறது. தூரம் எனும் ஒரு பாவி இடையில் வந்து இருவர் நெஞ்சை யும் துடிக்க வைக்கும் உலகியலேச் சுவைக்கிறேம்

திருமலே நாயக்கரின் காலத்தில் கதை நிகழ்ந்ததாகக் கற் பிக்கப் பெறுகிறது, பொன்முடி பூங்கோதை உறவு முறையில் ஏற்பட்ட தொடர்பு பெற்ரேர் பகையால் தடைபட்ட நிலேயில் காதலுக்குக் கண்ணில்லே என்று மெய்ப்பிக்க இருவரும் சந்தித்து இணைகின்றனர். ஒருவர் மீது ஒருவர் கொண்ட அன்பு பெற் ரேருக்குந் தெரியாமல் சந்திக்கவும், சணப்பனேத் தூதனுப்பவும் துணிவைத் தருகிறது. அவலச் சுவையின் உச்சத்தில் கதையை முடிக்குங் கவிஞர் சணப்பனே இடம். பொருள், ஏவல் அறியா தவனுகவும் நகைச் சுவைக் கேற்றவனுகவும் படைத்துக் காட்டுகிருர்.

மூதன் முதல் பொன்முடிதான், பத்து வராகன் கொடுத்துச் சந்திக்க வேறு நேரங் கேட்டு வருமாறு சணப்பனேப் பூங்கோதை யிடம் அனுப்புகிருன். பூங்கோதையைச் சந்தித்த பொன்முடி புன்னேயில் கட்டியடிக்கப்பட்டு விரட்டப் படுகின்ருன். பூங் கோதை காவலாக்கப்படுகிருள். தலேவன் தேர்ந்தெடுத்த தூதே தனக்கும் ஏற்றதெனத் துணிந்து சணப்பன் மூலமே பொன் முடிக்குக் கடிதங் கொடுத்தனுப்புகிருள். இடமறியாமல் நேரம் போக்குஞ் சணப்பனே இங்கு படம் பிடித்துக் காட்டுங் கவிஞர் இதுவே பூங்கோதை சணப்பனேச் சந்திக்கும் இறுதிச் சந்திப் பென்பதை 'பாவை திக் கென்று தீப்பிடித்த முகங் காட்டச் சென்றெழிந்தான்' என்று குறிப்பால் உணர்த்துகிருர்.

பூங்கோதையின் கடிதத்தைப் படித்த பொன்முடி பண்டாரத் திடம் பொய்த்தாடியும் மீசையுங் கேட்கிருன் அருகில் கணக் கர் நிற்கின்றனர். 'அவள் ஒரு வெள்ளே நூல் போல் ஆய் விட்டாள்', 'கவலே தான் அவள் நோய்' என்றெல்லாம்

நுணுக்கமறியாச் சணப்பன் உரைக்கிருன். கணக்கரை அனுப்பியபின் பொன்முடி பண்டாரத்தைப் பார்த்துக் ‘ குறிப்பறியாமல் நீவிர் குண்டானிற் கவிழ்ந்த நீர் போல் கொட்டாதீர் ’ என்கிருன். மீண்டும் கணக்கரைப் பார்க்கச் செல்வதாய்ப் பண்டாரங் கூற ஏனென்கிருன் பொன்முடி உனக்கும் பூங்கோதைக்கும் எத் தொடர்பும் இல்லையென்று அவர்களிடம் சொல்லி விடுகிறேன் ” என்கிருன் பண்டாரம் ‘ எங்கப்பன் குதிருக்குள் இல்லை ’ என்னும் பழமொழியை நினைவூட்டும் பண்டாரத்தின் கூற்று நகைச் சுவை நல்குகிறது

பொன்முடி அடிபட்ட செய்தியைப் பொன்னன் உரைக்க பெற்ரோர் பெருந் துயருறுகின்றனர். நின்றெரியும் செந்தீயில் நெய்க்குடமும் சாய்த்தது போல் பண்டாரமும் உளறிக் கொட்டி உண்மையை உணர வைக்கிருன். அம்மட்டோ? கடையிலிருந்து திரும்பி வரும் பொன் முடியைப் பார்த்து “ உன் தந்தையாரும் நானும் ஒன்றுமே பேசவில்லை ” என்று தொடங்கி கேளப்பா தாடிச் சேதி கேட்கவும் இல்லை என்று முடிக்கிருன். கோளனும் பண்டாரத்தின் கொடுமையை வெறுத்துச் சென்ருன் என்று பொன்முடிக்கும் சணப்பனுக்குமுள்ள தொடர்பை முற்றுப்பெற வைக்கிருர்.

ஒலிகடல் நீலப்பெட்டி உடைத்தெழுந்தது கதிர். மறைநாய்கன் செயலை வல்லிருளும் கண்டு சிரித்தது போல் காலை அரும்பிற்று, தணலிலே நின்றிருப்போர் தண்ணீரில் தாவுதல் போல் எழுத்தினை விழிகள் தாவ இதயத்தால் வாசிக்கின்ருன், மலர்ந்தது செங்கதிர், மலர்ந்தது காலை, அவன் பார்த்தான், அவளும் பார்த்தாள், மாமியவள் பால் கறந்து முடிக்க இங்கு மருமகனும் இச்சென்று முடித்தான் முத்தம், தீந்தமிழர் உயர்வினுக்குச் செத்தான் அன்பன் செத்ததற்குச் செத்தாள் இத் தென்னுட்டன்னம் ஆகிய கவிஞரின் கருத்துச் சரங்கள் முத்தப் பாவையின் எழிலை ஏற்றிக் காட்டுகின்றன.

பாவேந்தரின் தனி முத்திரைகள் பலவற்றைத் தாங்கி நிற்கும் பாவியம் ‘ எதிர்பாராத முத்தம் ’ என்பதில் ஐயமில்லை.

வாழ்க பாவேந்தர் புகழ்.

பாரதிதாசனின் படைப்புக்கள் பற்றி...

இரா. இளவரசு, எம். ஏ. பி எச்டி.,

0 1. பாரதிதாசன் வீட்டுப் பானைச் சட்டியும் பாட்டியற்றும் என்பது புதுமொழி. எழுச்சியும் இனிமையும் நல்கும் ஏராளமான படைப்புகளை எழுதிக் குவித்தவர் பாரதிதாசன். அவரின் எழுத்தோவியங்கள் ஏறத்தாழ ஐம்பது நூல்களாய் வெளிவந்துள்ளன. அவற்றுள் சில காணவும் கிடைக்காத அருமையுடையனவாய் மறைந்து விட்டன. சில நூல்களில் முன்பதிப்புகட்கும் பின் பதிப்புகட்கும் வேறுபாடுகள் தென்படுகின்றன. சில நூல்கள் முன்னர் தனி நூல்களாக வெளியிடப்பட்டும் பின்னர் தொகுதிகளில் இணைக்கப்பட்டும் தொகுதிகளாக்கப்பட்டும் வெளிவந்துள்ளன. பிற்காலத்திய படைப்புகள் சில முன்னர் நூலுருப்பெற்றும் முற்காலப் படைப்புகள் சில அவற்றுக்குப் பின்னர் நூலுருப்பெற்றும் காலவரிசை மாறியுள்ளன. இவை ஒரு புறமிருக்க. தாளிகைகளில் வெளியாகி இன்னும் நூலுருப் பெறாத எழுத்தோவியங்கள் ஏராளம் பாரதிதாசன் மறைந்து பதினோர் ஆண்டுகள் கடந்த பின்னருங்கூட அப்படைப்புகள் அனைத்தையும் திரட்டி நூல்களாக வெளியிடவில்லை என்பது வருந்துதற்குரிய நிலைமை. அவரை முழுமையாக அறியவும் மதிப்பிடவும் அவரின் படைப்புகள் அனைத்தும் தேவை. அவற்றை முறைப்படி உலகின் முன் வைக்க வேண்டியது இன்றியமையாதது அவை பற்றிய சில செய்திகளைப் பரிமாறிக் கொள்கிறது இக்கட்டுரை.

1. 0. இந்திய விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டு ஒத்துழையாமைக் காலத்தில் அவ்வியக்கத்துக்குத் துணை செய்யும் வகையில் இருபது சிறு நூற்கள் பாரதிதாசன் எழுதியதாகவும் அவற்றுள் சில அச்சிடப்பட்டதாகவும் அறிகிறோம்.[1] அச்சிடப்பட்ட நூல்களாய்த் தெளிவாகத் தெரிய வருவன மூன்று. அவை 'சிறுவர் சிறுமியர் தேசிய கீதம்', 'தொண்டர் படைப் பாட்டு', கதர் இராட்டினப் பாட்டு ஆகியன[2] 1930-க்கு முன் வெளியிடப்பட்ட முதல் இரண்டு நூல்களும் இன்று கிடைக்கவில்லை. 1930-இல் வெளியான மூன்றும் நூல் புதுவையிலுள்ள நினைவு நூலகத்தில் உள்ளது. 1926-இல் வெளியான 'மயிலம் சுப்பிரமணியர் துதியமுது' என்னும் நூல் இன்று ஒருவர் இருவரிடமே உள்ளது.[3] இப்படி யொரு நூல் அவரால

இயற்றப்பட்டது என்பதே பலர்க்குத் தெரியாது எனினும் அது தான் அவரின் முதல் நூல் என்பது குறிப்பிடத்தக்கது சௌமியன் (1947). பாரதிதாசன் ஆத்திசூடி (1947), பொங்கல் வாழ்த்துக் குவியல் (1954) பாரதிதாசன் கதைகள் (1955), தேனருவி (1956) போன்ற சில நூல்கள் இன்று கிடைத்தற் கரியனவாயுள்ளன.

2.0. நூலாக வெளிவந்துள்ள படைப்புகள் சிலவற்றில் முன்பதிப்புகட்கும் பின் பதிப்புகட்கும் வேறுபாட்டைக் காண் கிறோம்

21. முன் பதிப்புகளில் இருந்த சில பகுதிகள் பின் பதிப்பு களில் விடப்பட்டுள்ளன. 1938-இல் குஞ்சிதம் குருசாமி அவர் களால் வெளியிடப்பட்ட 'பாரதிதாசன் கவிதைகள்' தொகுப் பின் இறுதியில் இடம் பெற்றிருந்த 'பிரிந்த பிராணைப் பெற முடியும்'. 'எங்குற்றான் ?' ஆகிய இரு பாடல்களும் பின்வந்த பதிப்புகளில் நீக்கப்பட்டுள்ளன. 1939-இல் வெளியான 'இரணி யன் இணையற்ற வீரன்' றாடகத்தில் இடம் பெற்றிருத்த இருபத்து மூன்று பாடல்களையும் 1968-இல் வெளியான நான் காம் பதிப்பில் காண முடியவில்லை. குயில் மாத இதழில் (1—7—'74) வெளியான 'சத்தி முத்தப் புலவர்' என்னும் நாடகம் 1965-இல் வெளியான 'பாரதிதாசன் நாடகங்கள் முதல் தொகுதி' யில் முப்பது வரிகள் (பிரிவு. 5) குறைந்து காணப் படுகிறது

2.2. சில நூல்களில் முன் பதிப்புகளில் இல்லாத பகுதிகள் சில பின் பதிப்புகளில் சேர்க்கப்பட்டுள்ளன 1949-ஆம் ஆண்டு வெளியான 'பாரதிதாசன் கவிதைகள் இரண்டாம் பகுதி' முதற்பதிப்பில் இடம் பெருத பல பாக்கள் பின்வந்த மூன்ரும் பதிப்பு முதலியவற்றில் சேர்க்கப்பட்டுள்ளன 'புதிய பாடல் கள் சேர்க்கப்பட்டுள்ளன' என்று மட்டும் அறிகிற நாம் சேர்க் கப்பட்டவை எவையெனஅறிதல் கால அடிப்படைப் பார்வைக் குத் துணை செய்யும் பின் வந்த பதிப்புகளில் காணப்படும் 'காதல் வாழ்வு' (சிறு காப்பியம்), 'இருசுடரும் என் வாழ் வும்', 'தென்றல்' (இயற்கை), 'பந்துபட்டதோள்', 'தன் மான உலகு,' 'திருமணம்' (காதல்), 'கதவு பேசுமா' (கருத்துரைப் பாட்டு), 'சிறுத்தையே வெளியில் வா', 'தீவாளியா ?' (திராவிடன்), 'குழந்தைப் பள்ளிக்கூடம்', 'வள்ளுவர் வழங்கிய முத்துக்கள்', 'இசைபெறு திருக்குறள்'

(பன்மணித்திரள்) ஆகிய பாடல்கள் பின்னர் சேர்க்கப் பட்டவை. 1948-இல் வெளியான 'முல்லைக்காடு' தொகுப்பில் (ஞாயிறு நூற்பதிப்பகம், புதுவை) இடம்பெறாத 'நாட்டுப் பாடல்கள்' எனும் பகுதி 1963-இல் வெளியான 'முல்லைக்காடு' மறுபதிப்பில் (முத்தமிழ் நூலகப் பிரசுரம். சென்னை) இணைக் கப்பட்டுள்ளது 'கழைக்கூத்தியின் காதல்' எனும் நாடக நூலில் (1951) உள்ள 1, 2, 3, 17, 18, 20, 21 ஆகிய காட்சிகள் அனைத்தும் அந்நாடகம் குயில் மாத இதழில் (பிப்ரவரி, மார்ச்சு ஏப்பிரல் 1948) வெளிவந்த போது இடம்பெறாதவை. நூலுருப் பெறும்போது ஏற்பட்ட மாற்றம் இது. 'முன்னர் வெளியிடப் பட்டதைச் சிறிது பெரிதுபடுத்தி' எழுதியதாகப் பாரதிதாசனே குறிப்பிட்டுள்ளார் (முன்னுரை 1951) எவ்வாறு பெரிது படுத்தப்பட்டது என்பதை அறிதல் பாரதிதாசனின் வளர்ச்சிப் போக்கைத் தெளிவுபடுத்தும்.

2 3. முன்பதிப்புகளில் இருந்த சில பகுதிகளில் தள்ளப் பட்டுப் புதிய பகுதிகள் கொள்ளப்பட்ட நூல்களும் உள்ளன. காட்டாகப் 'புரட்சிக்கவி'யைக் குறிப்பிடலாம். 1937-இல் தனி நூலாக வெளியான 'புரட்சிக்கவி'யில் உதாரன் அமுத வல்லிக்கு யாப்பிலக்கணம் கற்றுத் தரும் பகுதி மிக விரிவாக அமைந்திருந்தது.[4] பாவகை பற்றிய இலக்கணம் விளக்கப் பட்டிருந்தது.

'குறள்வெண்பா ஒன்றுமுக்கால் கொள்பஃ றொடையோ
அறுநா றடியாலும் ஆக்கு — நெறியாக
ஒன்றுமுக்கால் நற்றனிச்சொல் என்றாக நீண்டுவந்தால்
பன்னுகின்ற சிந்தியல் வெண்பா'.

என்பது விரிவான அப்பகுதியில் இடம் பெற்ற ஒரு நேரிசை வெண்பா. இவ்வாறு விரிந்த அளவில் அமைந்த விளக்கம் நீக்கப்பட்டுப்பின் வெளியீடுகளில் சுருக்கமான முறையில்

'யாப்புமுறை உரைப்பான் — அணி
யாவும் உரைத்திடுவான்;
பாப்புனை தற்கால — அது
பவம்பல புகல்வான்'.

எனச் சொல்லப்பட்டுள்ளது

2.3 1. பாடல்களின் தலைப்பு, சொல், தொடர் ஆகியவற்றி லும் முன்பதிப்புகட்கும் பின்பதிப்புகட்கும் வேறுபாடுகள் தென் படுகின்றன. பின்னர் வெளியான 'பாரதிதாசன் கவிதைகள்-

முதல் தொகுதிப் பதிப்புகளில் காணப்படும் 'வாழ்வில் உயர்வு கொள்', 'தவிப்பதற்கோ பிள்ளை' ஆகிய பாடல் தலைப்புகள் முதற் பதிப்பில் (1938) முறையே 'சுயமரியாதை போதனை', 'கர்ப்பத்தடை' எனக் குறிக்கப்பட்டிருந்தன. இரண்டாம் தொகுதியில் இப்போது காணப்படும் 'நம் மாதர்', 'மலையிலிருந்து', 'எந்த நாளும் உண்டு' எனும் பாடல் தலைப்புகள் முதற்பதிப்பில் (1949) முறையே 'மாதர்கள் விரத பலன்', 'சோபனக் கட்டிலில்', 'அந்தச் சுதந்திரம்' என்றிருந்தன

'புரட்சிக் கவி'யில் அமுதவல்லியின் கூற்றாக

'நாட்டின் இளவரசி நான் ஒருத்தி ஆதலினால்'

என வரும் பகுதி

'நாட்டின் இளவரசி நான் ஒருவள் ஆதலினால்' என முன் பதிப்புகளில் (1938, 1940) இருந்தது. 'ஒருவள்' என்னும் பெண்பாற் புதுச்சொல் பாரதிதாசனுக்கு உடன்பாடானதே. (குயில் கிழமையிதழ் 7—2—61) எனினும் 'ஒருவள்' 'ஒருத்தி' யாகியிருப்பது நோக்கத் தக்கது முன்னர் கையாண்ட பிற மொழிச் சொற்கள் பல பின் பதிப்புகளிலும் இடம் பெற்றிருக்கின்றன. எனினும் சில பிறமொழிச் சொற்கள் நீக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். 'பாகிடை ஏறிய ருசியும்' என்றிருந்தது (தமிழின் இனிமை-முதல்தொகுதி) 'பாகிடை ஏறிய சுவையும்' எனவும், 'உயர்விரதம் அநுஷ்டிப்பதால்' என்றிருந்தது (நம்மாதர்- இரண்டாம் தொகுதி) 'உயர்விரதம் மேற்கொள்வதால்' எனவும் தமிழாகியிருப்பதைச் சான்றாகக் காட்டலாம்.

இரண்டாம் தொகுதி முதற்பதிப்பில் 'திவ்ய பாரததேசமே' (கடவுளுக்கு வால் உண்டு), 'தூய பாரத தேசமே' (மலையிலிருந்து), 'அழகு பாரத தேசமே' (எந்த நாளும் உண்டு) எனப்பாடல்கள் பெற்றிருந்த முடிவுத் தொடர்கள் பின்னர் முறையே 'திருவார்ந்த என்றன் நாடே', 'தூய என் அன்னை நாடே', 'அழகு செந்தமிழ் வையமே' என மாற்றப்பட்டிருக்கின்றன

2 3.2. இப்போது வெளிவரும் சில பதிப்புகளில் முன் பதிப்புகள் வெளியான ஆண்டுகள் தவறாகக் குறிக்கப்பட்டுள்ளன. பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி 1936-இல் வெளியானதாகச் சில பதிப்புகளில் (பதினாறும் பதிப்பு 1970) குறிக்கப்பட்டுள்ளது. அது தவறு. முதற்பதிப்பு 1938-இல் வெளியாயிற்று. 1974-இல் வெளியிடப்பட்ட 'காதலா கடமையா' பதிப்

பில் 'முதற்பதிப்பு ஏப்ரல் 1948, இரண்டாம் பதிப்பு ஆகஸ்டு 1974' என மாதம் உட்படக் குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் 1953-இல் பாரதிதாசன் பதிப்பகத்தால் (புதுவை) வெளியிடப்பட்ட 'காதலா கடமையா' வில் 'முதற் பதிப்பு 1949, இரண்டாம் பதிப்பு 1953' எனக் குறிக்கப்பட்டுள்ளது. பதிப்பின் ஆண்டில் மட்டுமன்றிப் பதிப்பின் எண்ணிக்கையிலும் மாறுபாட்டைக் காண்கிறோம். முறைப்படி 1974-இல் வந்துள்ள பதிப்பு மூன்றாம் பதிப்பே 'பாரதிதாசன் நாடகங்கள்' எனுந் தொகுப்பு நூல் 1959 மார்ச்சில் முதன்முதல் வெளியிடப்பட்டது ஆனால் அண்மையில் வெளியான மூன்றாம் பதிப்பில் (மே 1974) 'முதற்பதிப்பு மார்ச் 1965. இரண்டாம் பதிப்பு ஜனவரி 1975' எனக் குறிக்கப்பட்டுள்ளது! பதிப்பாளர் தம் கவனக் குறைவால் பாடல்களில் பயிலும் சில சொற்களும் பின்பதிப்புகளில் பிழையாகவே அச்சிடப்பட்டுள்ளன. 'தொல்லையுள்ளம் ஒன்றுண்டு' (உலக ஒற்றுமை), 'வேல் விழியால் என்றன் விலாப்புறத்தைக் கொந்தாதே' (புரட்சிக் கவி) என முதல் தொகுதியில் வந்த தொடர்கள் 'தேன்லையுள்ளம் ஒன்றுண்டு', 'வேல் விழியால் என்றன் விலாப் புறத்தைக் கொத்தாதே' எனப் பிற்காலப் பதிப்புகளில் அச்சிடப்பட்டுள்ளன.

2.3.3. 'கொய்யாக்கனிகள்' எனுந் தலைப்பில் 'ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்' இதழில் (1934-35) வெளியான கதைபொதி பாட்டுத்தொடர் பின்னர் வடிவம் மாறி 'படித்த பெண்கள்' எனும் உரைநடை நாடகமாக (1948) வெளிவந்துள்ளது 'கொய்யாக் கனிகள்' கவிதா மண்டலம் இதழ்களிலேயே புதையுண்டு போனது நினைக்கத் தக்கது

3.0 ஒரு நூலில் ஒருமுறை இடம்பெற்ற சில பாடல்கள் வேறு நூலிலும் இடம் பெறுவதைக் காண்கிறோம். 'கடவுள் மாதர்'. 'நம மாதர் நிலை' எனும் பாடல்கள் முதல் தொகுதியிலும் இரண்டாம் தொகுதியிலும் இடம் பெற்றுள்ளன. தாழ்த்தப்பட்டார் சமத்துவப்பாட்டில் (1930) அடங்கிய 'சேசு பொழிந்த தெள்ளமுது' முதல் தொகுதியிலும் மூன்றாம் தொகுதியிலும் காணப்படுகிறது. இசையமுது இரண்டாம் தொதியில் (1952) உள்ள பல பாடல்கள் முன்னரே முல்லைக் காட்டில் (1948) வெளிவந்தவை

3.1 தொடக்க காலத்தில் தனி நூல்களாக வெளிவந்த பல படைப்புகள் பிற்காலத்தில் தொகுதிகளில் இணைக்கப்பட்டும் தொகுதிகளாகவும் வெளியிடப்பட்டன. முதல் தொகுதியின்

தொடக்கத்திலுள்ள சஞ்சீவி பர்வதத்தின் சாரலும் புரட்சிக்கவி யும் முறையே 1930, 1937-ஆம் ஆண்டுகளில் தனி நூல்களாக வெளிவந்தவை மூன்றுந் தொகுதியில் அடங்கிய பாடல்கள் அனைத்தும் தனித்தனி நூல்களாக முன்னரே வெளிவந்தவை. (தாழ்த்தப்பட்டார்) சமத்துவப்பாட்டு 1930-இலும் அகத்தியன் விட்ட புதுக்கரடியும், நல்லமுத்துக் கதையும் ஒரு நூலாக 1948-இலும் திராவிடர் திருப்பாடல் 1948-இலும் கடல்மேற் குமிழிகள் 1948-இலும் ஏற்றப்பாட்டு 1949-இலும், அமிழ்து எது 1951-இலும் வெளிவந்துள்ளன. 1930-இல் வெளியான 'கதர் இராட்டினப் பாட்டு' முல்லைக் காடு மறுபதிப்பில் (1963) இணைக்கப்பட்டு 'நாட்டுப் பாடல்கள்' எனப் பெயர் மாற்றம் பெற்றுள்ளது. 'பாரதிதாசன் நாடகங்கள்' முதல் தொகுதி (1959) யில் உள்ள' கற்கண்டு, 'பொறுமை கடலினும் பெரிது' ஆகிய இரண்டும் 1944-இல் ஒரு நூலாகவும் 'இன்பக்கடல், சத்திமுத்தப்புலவர்' இரண்டும் 1950-இல் ஒரு நூலாகவும் வெளிவந்தன. தனித்தனி நூல்களாக வெளிவந்தபோது அவை பெற்றிருந்த முன்னுரை முதலிய பகுதிகள் விடப்பட்டன என்பதோடு அவை முதலில் வெளியான ஆண்டுகளும் தொகுப்புகளில் சுட்டப்படவில்லை

4.0 கால அடிப்படையில் பாரதிதாசன் படைப்புகளை மதிப் பிடுவதற்கு நூல்கள் வெளியிடப்பட்ட ஆண்டுகளை அடிப்படை யாகக் கொள்ளக்கூடாது சில படைப்புகள் உடனுக்குடன் நூல் வடிவம் பெற்றன சில முன்னரே இதழ்களில் வெளியாகியிருப்பி னும் பிற்பட்ட காலத்தில் தான் நூலுருப்பெற்றுள்ளன. முல்லைக் காடு 1948-இல் வெளியானது. அதில் இடம் பெற்றுள்ள பாடல் கள் அனைத்தும் 'ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்' (1934-35) இதழில் வெளியானவை. பாண்டியன் பரிசு (1943) அழகின் சிரிப்பு (1944) தமிழியக்கம் (1945) முதலிய நூல்களி னும் காலத்தால் பிற்பட்டு முல்லைக்காடு வெளிவந்த போதும் அதிலுள்ள பாடல்கள் அவற்றினும் காலத்தால் முற்பட்டவை. பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதியிலுள்ள சில பாடல்களி னும் (எழுதாக் கவிதை உன்னை விற்காதே-கவிதா மண்டலம் வெளியீடு-7) இரண்டாம் தொகுதியில் (1949) வெளியான பாரதியார் பற்றிய சில பாடல்கள் (செந்தமிழ் நாடு, திருப்பள்ளி எழுச்சி, நாடக விமரிசனம் - கவிதா மண்டலம் வெளியீடு-6) காலத்தால் முற்பட்டவை.

5.0 'ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்' (1934-35) குயில் மாத இதழ் (1947-48) குயில் கிழமையிதழ் (1958-61), குயில் திங்களிரிதழ் (1962) எனப் பாரதிதாசனே நடத்திய இதழ்

களிலும் பிற இதழ்களிலும் பாரதிதாசன் எழுதிய பல படைப்புகள் இன்னும் நூலுருப் பெருமல் இருக்கின்றன.

5.1. இதுவரை நூலுருப்பெருமல் இருக்கும் பாடல்களை மட்டும் தொகுத்து வகைப்படுத்திஞல் அவை மூன்று தொகுதிகளுக்குக் குறையாமல் அமையும் இந்திய விடுதலை இயக்கத் தொடர்பில் அவர் இயற்றிய பாடல்களை மட்டும் தனித் தொகுதியாக வெளியிடலாம்.

5 2. 'பாரதியாரோடு பத்தாண்டுகள்' என்ற தலைப்பில் 'பாரதிதாசன் குயில்' இதழில் வெளிவந்த பாரதிதாசனின் கட்டுரைகளோடு, பாரதியாருக்கும் தமக்கும் முதலில் தொடர்பேற்ற வகையை 'ரவிவர்மா பரமசிவப்பட பாரதி-கல்யாணப் பந்தலில் சந்திப்பு' என்ற தலைப்பில் 'ஹிந்துஸ்தான்' இதழில் (பாரதி மலர் 10—9—1939) பாரதிதாசன் எழுதிய கட்டுரையையும் 'பாரதியார் பற்றிய சில குறிப்புகள்' எனக் குயில் கிழமை இதழில் (20—9—60) எழுதிய கட்டுரையையும் இணைத்து ஒரு நூலாக்கலாம். பாரதியார் பாரதிதாசன் ஒப்புமை ஆய்வுக்கு இத்தொகுப்பு மிகவும் பயன்படும்.

5.3. 'அம்மியும் நகரும்' (குடிஅரசு 26—3—1933) 'அன்பே சிவம் என்பது ஆத்திகர் கரடி' (குடிஅரசு 9—4—1933) 'தமிழன் யார்' (குயில் 1—6—58) 'வடநாட்டில் கல்வெட்டுகள் உண்டானமைக்கு ஏது' (குயில் 27—9—'60) 'அராபிய எண்கள் தமிழ் எண்களே' (குயில் 24—1—'61) 'சாதி ஏன்' (பாரதிதாசன் குயில் 10—2—'68) முதலிய பாரதிதாசனின் தனிக்கட்டுரைகளையும் இதழ்களில் எழுதிய சிறந்த ஆசிரியவுரைப் பகுதிகளையும் தேர்ந்தெடுத்து நூலாக்கலாம்.

5.3 1. ஏறத்தாழ மூன்ருண்டுக்காலம் (1958-61) 'வந்தவர் மொழியா செந்தமிழ்ச் செல்வமா' எனுந்தலைப்பில் குயில் கிழமையிதழில் பாரதிதாசன் எழுதிய சொல்லாராய்ச்சித் தொடர் ஒரு பெரு நூலாகும் அளவினது. அது அவரின் மொழி பற்றிய கொள்கையினையும் பரந்துபட்ட அறிவினையும் உணர்த்தவல்லது.

5.3 2 'வள்ளுவர் உள்ளம்' என்னுந் தலைப்பில் சாங்கிய மதக்கொள்கையின் அடிப்படையில் குயில்கிழமை இதழில் எழுதி வந்த திருக்குறள் புத்துரையும் நூலாகுந்தகுதியுடையது. முதல் எண்பத்து மூன்று குறள்களுக்கு எழுதிய உரை மட்டுமே இதழில் வெளியானது. ஏனைய குறள்கட்கும் அவர் உரை எழுதிய

தாகவும் அவ்வுரை அவர் புதல்வரிடம் உள்ளதாகவும் சொல்லப் படுகிறது. குறள் முழுமைக்கும் உரை இல்லையெனினும் இருக் கும் அளவையாவது நூலாகக் கொணர்வது நலம்.

5 3.3 குயில் கிழமை இதழில் வினு விடைப்பகுதி 'கேட் டலும் கிளத்தலும்' எனுந் தலைப்பில் வெளிவந்தது. அப்பகுதி யில் பாரதிதாசன் அளித்த விடைகள் பல அவரின் தெளிவான கொள்கைகளை நமக்குக் காட்டுகின்றன. அவற்றைத் தேர்ந் தெடுத்து நூலாக்கலாம்.

5.4. 'செவ்வாயுலக யாத்திரை '(புதுவை முரசு 5 1.'31) 'ஏழைகள் சிரிக்கிறார்கள் இதயம் எப்படி இருக்கிறது.' (புரட்சி 11.2 '34) 'பழம் நழுவிப் பாலில் விழுந்தது' (குயில் 8 7.58) 'புலவர் முண்டைக் கண்ணி ஆம்படையான்' (குயில் 31.3.59) 'முயற்சியே வாழ்வு சோம்பலே சாவு' (குயில் 22.9.59) 'வைகறைத் துயிலெழு' (குயில் 4 10 60), தமிழ்ப் பற்று (பாரதிதாசன் குயில் 10.9.'67) முதலிய சிறுகதைகள் பல இன னும் நூலுருப்பெறுமல் உள்ளன. இன்று கிடைப்பரிதாயுள்ள 'பாரதிதாசன் கதைகள்' (1955) என்னும் நூலின் மறுபதிப் பில் இந்தக் கதைகளை இணைத்து வெளியிடலாம்.

5 4.1 குயில் மாத இதழில் 'அனைவரும் உறவினர்' என் னும் தொடர் கதை யொன்றைப் பாரதிதாசன் எழுதினுர். நான்கு இதழ்களில் முப்பத்திரண்டு இயல்கள் மட்டும் வெளி யாகிய அக்கதை இதழ் நின்று விட்டதால் தொடரவில்லை போலும். பிற்காலத்தில் குயில் வார இதழாக வெளிவந்த போதும் அக்கதை தொடரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கதையின் போக்கை நோக்கினுல் அது மிகப் பெரிதாக விரிந்து செல்லும் அளவில் திட்டமிடப்பட்டது எனத் தெரிகிறது. பாரதியாரின் சின்னச் சங்கரன் கதை' யைப் போல இதுவும் முழுமையுறவில்லை எனினும் இஃதொன்றே பாரதிதாசன் எழு தத் தொடங்கிய தொடர்கதை ஆதலின் இதையும் வெளியிடலாம்.

5.5. 'குலத்தில் குரங்கு (குயில் 1.1.48) 'ஆரிய பத்தினி மாரிஷை' (குயில் 15 5.48), 'கோயில் — இரு கோணங்கள்' (முரசொலி பொங்கல் மலர் 1956), 'அம்மைச்சி' (குயில் 17.6 58) 'ஒரு காட்சிச் சிறு நாடகம்' (குயில் 12 8.58)' குடும்ப விளக்கும் குண்டுக் கல்லும் (பாரதிதாசன் குயில் 10.6.67 — 10 8.67) முதலிய நாடகங்கள் சில இன்னும் நூலு ருப் பெறவில்லை.

5 6. பாரதிதாசன், பாரதியார் பற்றிய திரைப்படம் எடுப்பதற்கான (கதை, உரையாடல்...) எழுத்து வேலையைத் தாம் இறப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பே முடித்து விட்டதாகவும், அதனைப் பதினைந்து நாட்கள் தொடர்ந்து நல் உறக்கமின்றி எழுதியதாகவும் அறிகிறோம். [5] பாரதியார் பற்றிய முற்றுப்பெற்ற அப்படைப்பு இப்போது பாரதிதாசனின் புதல்வரிடம் இருப்பதாகத் தெரிகிறது. அது வெளியிடப்பட்டால் இரு பாவலர்களைப் பற்றியும் மேலும் அறிந்து கொள்ள வாய்ப்பேற்படும்.

6.0. பாரதிதாசனின் படைப்புகள் பற்றிப் பொதுவாகப் பார்த்தோம். இப்பார்வை இனி நாம் செய்ய வேண்டியவற்றை உணர்த்தும். இப்போது கிடைக்காத நூல்களான 'சிறுவர் சிறுமியர் தேசிய கீதம்', 'தொண்டர் படைப்பாட்டு' ஆகியவற்றைத் தேடும் முயற்சியில் ஈடுபடவேண்டும் 'மயிலம் சுப்பிரமணிய துதியமுது (1926), 'கதர் இராட்டினப் பாட்டு (1930) 'பாரதிதாசன் ஆத்தி சூடி' (1947) முதலிய நூல்களை முன் அமைப்பு மாறாமல் அப்படியே அச்சேற்ற வேண்டும் முற்காலப் படைப்புகள் பாரதிதாசனின் பிற்காலக் கருத்துகட்கு மாறுபட்டவை எனினும் வெளியிடப்படல் வேண்டும். தொடக்ககாலப் பாரதிதாசனைப் புரிந்து கொள்ள அவை துணை செய்யும். சில நூல்களின் பின் பதிப்புகளில் காணப்படுகிற மாற்றங்களில் பல பாரதிதாசனே செய்தவை. சில பதிப்பாளர்களால் செய்யப்பட்டவை. முன் வகை மாற்றங்கள் பாரதிதாசனின் இலக்கிய, சமுதாயக் கொள்கைகளின் போக்கை அறியத் துணை செய்வன. பின்வகை மாற்றங்கள் தவிர்க்க வேண்டியன இரணியன் அல்லது இணையற்ற வீரன் (1968) பதிப்பில் இருபத்துமூன்று பாடல்கள் விடுபட்டமை பதிப்பித்தாரின் கவனக் குறைவால் ஏற்பட்டது. பதிப்பாண்டுகள் பிழையாகத் தரப்பட்டால் அவ்வாண்டுகளின் துணையோடு ஆசிரியனின் வளர்ச்சி நிலையைக் கணித்தறியும் ஆய்வாளன் ஒருவன் சரியான முடிவுக்கு வருதல் எளிதன்று. 'பதிப்பாளன நூலைக் கெடுத்தான்'என்னும் புதுமொழிதோன்றாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். முன்னர் தனி நூல்களாகவும் தனிப்பாடல்களாகவும் வந்த படைப்புகள் பின்னர் தொகுதிகளாக்கப்படும் போது அப் படைப்புகள் முதன்முதல் வெளியான ஆண்டுகளையும் குறிப்பிடுதல் நல்லது. சில படைப்புகள் தனி நூல்களாக வெளிவந்த போது அவற்றுக்குப் பாரதிதாசன் எழுதிய முன்னுரைகள் தொகுதிகளாக்கப்படும் போது விடப்பட்டுள்ளன. அம்முன்னு

ரைகளில் அப்படைப்புகளின் உருவாக்கத்தோடு தொடர்புடைய செய்திகள் சொல்லப்பட்டுள்ளன. ஒருபக்க அளவே அமையும் அம் முன்னுரைகளையும் அப்படைப்புகளோடு இணைத்து வெளியிடவேண்டும் அம்முன்னுரைகளும் முதலில் வெளியான ஆண்டுக் குறிப்பும் பொதுவாகத் திறனாய்வாளர்கட்கும் சிறப்பாகப் பாரதிதாசனைக் கால அடிப்படையில் கணிக்கின்றவர்க்கும் பெரிதும் பயன்படும், ஒரு நூலில் இடம்பெற்ற ஒரு படைப்பே பிறிதொரு நூலிலும் இடம்பெறாதவாறு திருந்திய முறையில் பதிப்புகள் அமைதல் நலம் இதுவரை நூல்வடிவம் பெறாமலிருக்கிற எழுத்தோவியங்களைத் தொகைவகைப் படுத்திச் செம்மையான நூல்களாகக் கொணர்தல் வேண்டும் முழுமையான முறையில் பாரதிதாசனை அறிந்துகொள்ள அப்படைப்புகள் இன்றியமையாதவை

சான்றெண் விளக்கம்:

1. கதர் இராட்டினப்பாட்டு, முகவுரை, காசி ஈ. லக்ஷ்மண் ப்ரசாத் 1930, புதுவை.

2. கதர் இராட்டினப்பாட்டு, முகப்பு அட்டையின் உட்பக்கக் குறிப்புகள், 1930, புதுவை.

3. 'மயிலம் சுப்பிரமணியர் துதியமுது' 'ஸ்ரீ சுப்பிரமணியர் துதியமுது' எனப்பெயர் மாற்றப்பட்டுப் 'பாரதிதாசன் குயில்' இதழில் (10—12—1967) வெளியானது.

4. 'பாரதிதாசன் குயில்' 10—5—1967, புதுவை.

5 'நலிவுற்ற உடலில் வலிவுற்ற மனம்' - ந இராமநாதன் பாரதிதாசன் குயில், 10—1—1968.

சிலம்பு புலம்புகிறது.

பேராசிரியர் கோ. தெய்வநாயகம், எம் ஏ., பி.எசி., டிப்-இன்-அக்.

சென்ற இதழின் தொடர்ச்சி.

வேள்விச்சாலை:

"தந்தேன் வரம்" எனக் கண்ணகியார் கூறியவுடன் செங்குட்டுவன், கண்ணகியாரை வணங்கிய அரசர்கள் சூழ மாடலன் மறையோனொடு, அம் மறையோன் கேள்வி நிரம்பிய வேள்வி மாக்களைக் கொண்டு தன்னேவல்வழி தன் வடபுல வெற்றியின் நிறைவாக அமைத்து வைத்துள்ள வேள்விச்சாலைக்குச் சென்றான். எனவே கண்ணகியார் கடவுண் மங்கலஞ் செய்யப் பெற்ற நிலையில் சேரனாலும் அனைவராலும் வணங்கப்பட்ட நாளில்தான் வேள்விபுரியும் பொருட்டும் செங்குட்டுவன் சென்றிருந்தான் என்பது வெளிப்படை. மேலும் "வேள்விச் சாலையின் வேந்தன் போந்தபின்தான்" "யானுஞ் சென்றேன்" என இளங்கோ தெளிவாகத் தாம் கண்ணகிக் கோட்டத்திற்கு தனியாகச் சென்ற போழ்து சேரன் செங்குட்டுவன் மாடல மறையோனொடு வேள்விச் சாலைக்குப் போயினான் எனக் கூறுகிறார். இவண் "வேந்தன் போந்தபின்" "யானுஞ் சென்றேன்" எனுஞ் சொற்றொடர்களை நோக்கும் போது இளங்கோவடிகள் செல்வதற்கு முன்பே கண்ணகிக் கோட்டத்தினின்றும் அரசன் வேறெங்கோ உள்ள வேள்விச் சாலைக்குச் சென்றான் என்பதறிக. எனவே கண்ணகிக் கோட்டத்தினின்றும் சேய்மையிலே எங்கேயோ தான் மாடலன் மறையோன் அமைத்த வேள்விச் சாலை இருந்திருக்கின்றது என்பது தெளிவு.

பொருண்மை:

1. இது காறுங்கண்ட கருத்துக்களால் சேரன் செங்குட்டுவன் தான் எடுப்பித்த பத்தினிக் கோட்டத்துள், கண்ணகியாரைக் கடவுள் மங்கலஞ் செய்து வழி பட்டமை நெடுவேள்

குன்றப் பறம்பின் தாழ்வரையில் தான் என்பதனை சிலப்பதிகாரம் மணிமேகலை எனும் நூல்களைக் கொண்டு தெரிந்து தெளிந்தோம்.

2. இலக்கியத்தில் காணப்படும் அமைப்பில் வையை ஒரு கரை (தென் கரை) பற்றி அவல், மிசை கருதாது, நெடுவேள் குன்றம் அடிவைத்தேறி வேங்கை மரநிழலில் தாழ்வரையில் கண்ணகியார் நின்றிறந்து, பின் சேரனுல் கோட்ட மெடுப்பிக்கப் பட்ட நிலையில் தெய்வமாக வணங்கப்பட்டமை இன்றளவும் வரலாற்று முறையில் நேரிற் காணச் செல்லும் பெற்றியாளர்க்குக் காணக் கிடைப்பதே என்பதனை பேராசிரியர் சி கோ. அவர்களின் கண்டுபிடிப்பினுல் நன்கு அறிந்து கொள்ள முடியும். எனவே சிலம்பில் காணப்படும் வரலாற்றுச் சான்றுகள் உண்மையானவையே.

3. பேராசிரியர் சி. கோ. அவர்கள் கண்டு பிடித்து தமிழர் தலைநிமிரும் படியான உறுதியான வரலாற்றுச் சான்ருகக் காட்டிய பத்தினிக் கோட்டத்துள் மங்கலா தேவிக் கோட்டம் சிவக்கோட்டம் முதலியன சங்ககாலப் பழமை அதாவது கி. பி. 2-ஆம் நூற்ருண்டுப் பழமை உடையனவாக இருப்பது அத் துறையாளர்களாலும் நேரிற் கண்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட செய்தியேயாம்.

4. வரலாற்றறிஞரவர்கள் கண்டுரைத்த கண்ணகியாரின் சிலை, இமைய மலையினைச் சார்ந்த கல் வகையினைச் சார்ந்த தாகும்.

5. அக்கண்ணகியாரின் சிலை கைவினை முற்றிய நிலைமை யிற்றிகழ்ந்து, மூற்றிழை பொறிக்கப்பட்டதாயிலங்குவது கைவன் கம்மியரால் எழுதப் பெற்றதே என்பதனை நிறுவுகின்றது.

6. கனகவிசயர் தம் தலையில் சுமக்கக்கூடிய, பருமனுடைய தாக அச்சிலை விளங்குகின்றது. அதாவது சிலை செதுக்கப்பட்ட இமயக் கல்லும் இருவரால் சுமக்கக் கூடியதே,

7. அச்சிலை பெற்றுள்ள தேய்வு அதன் பழைமையை எடுத்துக் காட்டுகிறது.

8. கோட்டத்திலுள்ள கல்வெட்டுக்களில் சில மிகப் பழமையானவை.

9. இயற்கைச் சூழலும் அமைவரப் பெற்றுளது.

ஆனால் கட்டுரையாசிரியர் திரு. மெய்கண்டார் மனத்தாற் சார்ந்து எழுதுகின்ற மலையாளத்திலுள்ள கொடுங்களூர் (கிராங்கனூர்) பகவதி கோயில் சேரன் செங்குட்டுவனால் அமைக்கப்பட்டதல்ல ஆங்குள்ள பகவதியும் கனக விசயர் சுமந்து வந்த இமயக் கல்லாலானதல்ல.

ஒற்றை முலைச்சி வணக்கம் சற்றேறத்தாழ இருபதிடங்களில் இன்னும் மலையாளத்தில் இருந்து வருகின்றது. கட்டுரையாசிரியர் கூற்றுப்படி நோக்க, இருபது இடங்களில் எது சேரனல் அமைக்கப்பட்டது? எதுவும் செங்குட்டுவன் காலத்திய பழமை உடையதாயில்லை.

ஒற்றை முலைச்சி வணக்கம் உள்ள இருபது கோயில்களும் பண்டைத் தமிழகக் கோட்ட அமைப்பில் பால்பெற வகுக்கப் பட்டன வல்ல.

பகவதியின் உருவம் நின்றநிலைக் கோலமுடையது. எட்டு கரங்களை உடையது. பலா மரத்தாலானது.

பருமனே பதின் மராலும் தூக்கவியலாதது. எனவே கனக விசயரால் தூக்கப்பட்டதது வல்ல.

சிலப்பதிகாரத்தை வழித்துணையாகக் கொண்டு வரலாற்ருய்வு முறையில் தாமே நேர்முறையில் "புகார் முதல் வஞ்சி வரை" சற்றேறத்தாழ இருபதாண்டுகளின் இடையரு முயற்சியால் சிலம்பினை ஆய்ந்து, நெடுவேள் குன்றின் மிசை ஏறி, பறம்

பின் தாழ்வரையில், வேங்கைக் கானல் என இன்றும் அழைக்கப் படுகின்ற, மங்கல தேவிக் கோட்டம் என இன்றளவும் பெயர் நிலைத்த கண்ணகிக் கோட்டம் கண்டு ஆங்குள்ள இயற்கைச் சூழல், கல்வெட்டுப் பழமை, கலைப் பழமை, சிலைப் பழமை, கோட்ட அமைப்பு இவற்றை அணுகி ஆய்ந்து பிறகு உறுதியாக எழுதி கண்ணகிக் கோட்டத்தை அறிமுகப்படுத்தித் தமிழகப் பழைமைக்கு உறுதி கொடுத்தவர் வரலாற்றறிஞர் பேராசிரியர் சி. கோவிந்தராசனார் அவர்களாவர்.

எனவே இனிமேலாவது தமிழர்கள் தமக்கென உள்ள, தந்தலை நிமிர்தற்கான பேராசிரியர் சி. கோ அவர்கள் அரிதின் முயன்றாய்ந்துரைத்த வரலாற்றுண்மையினை தன்மானத்துடன் எல்லா வகையாலுங் காத்துத்தம் புகழை நிலை நாட்டிக் கொள் வார்களாக.

மங்கல மடந்தைக் கண்ணகி என்பது பற்றிய விளக்கமினிக் காண்பாம்.